

# அமரர். இந்திரவதி பஞ்சலிங்கம்

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த

## 31ம் நாள் நினைவு மலர்

04.05.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்றும் எமது அன்புத் தாயாருக்கு சமர்ப்பணம்

எம்மையெல்லாம் பெற்று

சீர்பெறவளர்த்து

சிறப்பான கல்வி தந்து

இன்சொல் உணர்த்தி

கண்ணின் இமைபோல்

எமைக்காத்து உலகின்

நற்பிரஜைகளாக இருக்கச் செய்தவரும்

எங்கள் உள்மனதில் குடிகொண்ட

அன்புத்தெய்வத்திற்கு

இச்சிறு ஓலையை தங்கள்

பொற்பாதத்தில் காணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள்
பேரப்பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# திதி வெண்பா

வர்த்தலைவிளான் பெற்றெடுத்த ஒளி விளக்காம் இந்திரவதி
பெயருடையாள் திரு பஞ்சலிங்கம் மனையாள்
சிறப்புரு பங்குனி தேய்பிறை நவமி திதியில்
நீறு கந்த சடைமுடியான் நிறைபாதம் நன்னிலலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம் பலம்

# திருமுறைத்திரட்டு



## திருஞானசம்பந்த மூர்த்திசுவாமிகள் தேவாரம்

### முதலாந் திருமுறை

பண் : தக்கராகம்

மடையில் வாளை பாய மாதரார்
நடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட உருவ மென்கொலோ

### இரண்டாந் திருமுறை

பண் : நட்டவராகம்

பண்டு நால்வருக் கறமுரைத் தருளிப்பல்
லுலகினில் உயர் வாழ்க்கை
கண்ட நாதனார் கடலிடங் கைதொழக்
காதலித் துறை கோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில்
மஞ்ஞை நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறுந் துதிசெய் அருள்செய்
கேதீச் சரமது தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாந் திருமுறை

பண் : கொல்லி

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே.

## நான்காந் திருமுறை

### திருவிருத்தம்

வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மையுன் தாளென்றன் நெஞ்சத் தெழுதிவை ஈங்கிகழில்
அம்மை அடியேற் கருளுதி யென்பதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத் துறையுஞ் சிவக்கொழுந்தே.

## ஐந்தாந் திருமுறை

### திருக்குறுந்தொகை

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என்செயும்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்
கெல்லை யில்லதோர் அடிமைபூண் டேனுக்கே.

## ஆறாந் திருமுறை

### திருத்தாண்டகம்

மனத்தகத்தான் தலைமேலான் வாக்கி னுள்ளான்
வாயாரத் தன்னடியே பாடுந் தொண்டர்
இனத்தகத்தான் இமையவர்தஞ் சிரத்தின் மேலான்
ஏழண்டத் தப்பாலான் இப்பாற் செம்பொன்
புனத்தக்கதான் நறுங்கொன்றைப் போதி னுள்ளான்
பொருப்பிடையான் நெருப்பிடையான் காற்றினுள்ளான்
கனத்தகத்தான் கயிலாயத் துச்சி யுள்ளான்
காளத்தி யானவனென் கண்ணுளானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்
## ஏழாந் திருமுறை

பண் : தக்கேசி

திருவுமெய்ப் பொருளுஞ் செல்வமும் எனக்குன்
சீருடைக் கழல்கள்என் றெண்ணி
ஒருவரை மதியா துறாமைகள் செய்து
மூடியும் உறைப்பனாய்த் திரிவேன்
முருகமர் சோலை சூழ்திரு முல்லை
வாயிலாய் வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே

## மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்
## எட்டாந் திருமுறை

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காம்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருமாளிகைத்தேவர் திருவிசைப்பா
## ஒன்பதாந் திருமுறை

பண் : பஞ்சமம்

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில வீரா
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேந்தனார் திருப்பல்லாண்டு

பண் : பஞ்சமம்

சொல்லாண்டை சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருமூலநாயனார் திருமந்திரம்
## பத்தாந் திருமுறை

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே.

## மூத்தநாயனார் திருவிரட்டைமணிமாலை
## பதினோராந் திருமுறை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## சேக்கிழார்சுவாமிகள் திருப்புராணம்
## பன்னிரண்டாந் திருமுறை

ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணகிரிநாதர் திருப்புகழ்

அபகார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநா னினைந்தருட் பெறுவேனே
இபமா முகன்தனக் கிளையோனே
இமவான் மடந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமாளே

## அபிராமியம்மைப் பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாழி! அபிரா மியே.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ சுப்ரமண்ய ஸப்தகம்

கந்தனே! கடம்பனே! கருத்தினில் உறைந்திடும்
கருணை வடிவான குகனே!
கண்களோ பன்னிரண்டிருந்திடினும் ஏழையைக்
காக்க ஒரு கண்ணுமிலையோ!
சிந்தனை முழுவதும் சிதறிடா வண்ணமுன்
செம்மலர்ப் பாதங்களே!
சரண் என்று கொண்டுனைச் சந்ததம் பாவினேன்
செவிகளில் விழவில்லையோ!
வந்தனை செய்துனை வாழ்த்தியே நாளெல்லாம்
வணங்கிடும் சிறுவன் என்னை
வாழவே வைப்பதும் வேலவனே! உனக்கு ஒரு
விளையாட்டுச் செய்கை யன்றோ!
வந்தெனை இக்கணம் வலியவந்தே
அருள வேண்டியே பணிந்து நின்றேன்
வளமான திருத்தணியில் வந்துநிதம்
வாழ்கின்ற வேலனே! சக்தி மகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை விதங்களில் என் அப்பனே!
உன்னையான்! எப்படிப் பாடினாலும்
எத்தனை இடங்களில் என் ஐயனே!
உன்னையான்! எப்படி நோக்கினாலும்
எத்தனைபேர் சொல்லி என் குறைகள் யாவுமே
எடுத்து நான் கதறினாலும்
ஏலாமல் இன்னுமேன் என்னையே சோதித்து
எள்ளி நகையாடுகின்றாய்!
உத்தமன் உன்னையே ஓர் துணை என்று நான்
உறுதியாய் பற்றி நின்றேன்
உடனே உன்மயில்மீது ஓடோடி வந்தெனது
உறுவினைகள் யாவும் களைவாய்
பித்தனின் மைந்தனே! பக்தியாற் பிதற்றுமிப்
பித்தனையும் ஆண்டருள் வாய்!
பெருமைபொலி செந்தூரில் புகழ்சேர ஒளிர்கின்ற
பாலனே சக்தி மகனே!

கதியாக உன்பதங் கருத்தினில் கொண்டு நான்
கதறியே அழுகின்றதும்
கொடுமையாம் வறுமையிற் குமைந்து நான்
உன்னருளைக் கூவியே தொழுகின்றதும்
பதியான உன் செவிகள் பன்னிரெண்டிலொன்றிலுமே
பதியாமல் இருப்பதேனோ
படுதுயரம் இனிமேலும் படமுடியாதப்பனே
பார்த்தருள் புரிகுவாயே!
விதியான தென்னைமிக வாட்டியே வதைத்திடவும்
வேறொன்றும் செய்வதறியேன்
விழிகளில் நீர் பெருக வீழ்ந்துநான் கதறுவதை
வேடிக்கை பார்ப்பதழகோ
துதிபாடி உன்னையே தொழுகின்ற என்துயர்
துடைப்பதுன் கடமையன்றோ?
தூய்மைசேர் பழனிதனில் தனியாகத் தவங்கொண்ட
தூயனே! சக்தி மகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயவன் மருமகனே! மாகாளி மைந்தனே!
மனத்தினில் என்றும் வதியும்
மாயா சொரூபிணியும் மலையரசன் மகளுமாம்
மாசக்தி வேல் கொண்டவா
தூயவன் உன்னையான் தினமுமே பாடியும்
திருவுளம் இரங்க விலையோ!
துதிப்பதில் பிழையேது மிருப்பினும் தயவாகப்
பொறுத்தருள் தள்ளிடாதே!
நீயெனைத் தள்ளிடினும் நானுனது பாதமே
நம்பினேன் நாளும் ஐயா
நெஞ்சமும் உருகியே நீராக விழிகளில்
நாளெல்லாம் ஓடநானும்!
ஐயனே உன்னடிகள் அடைக்கல மென்றடைந்திட்டேன்!
ஆண்டருள் செய்குவாயே!
அழகான ஏரகத்தமருமொரு குருவே! என்
அன்னையாம் சக்தி மகனே!

பாரதனில் பிறந்திட்டுப் பலகஷ்டம் தான்பட்டு
பாவியேன் மிகவும் நொந்தேன்
பார்த்தருள் புரிவாய்! பார்வதியின் மைந்தனே
பாலனே! கருணை செய்வாய்!
பேரெதுவும் வேண்டிலேன்! புகழ் வேண்டேன்
உன்பாதப் புகலொன்றே போதுமப்பா!
பேதை நான் படுந்துயரைப் புரிந்து நீ
அருள் புரிந்து பாரெல்லாம் வாழவைப்பாய்
ஆரெதும் சொல்லிடினும் அத்தனையும் உன்னடியில்
அர்ப்பணித் தமைதி கொள்வேன்
ஆதரவு நீயன்றி ஆருமெனக் கில்லையென
அன்றே நான் கண்டுகொண்டேன்
ஊரெதனில் உறைந்தாலும் உள்ளத்தில்
என்றுமே உன்னை நான் சிக்கவைத்தேன்
உயர்வான பழமுதிர் சோலைதனில் உறைகின்ற
ஒருவனே சக்தி மகனே!
அஷ்டமா சித்திகளும் அண்டியுன் பாதமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டமா சித்திகளும் அண்டியுன் பாதமே
அடைபவர்க்கருள விலையோ?
அற்புதங்கள் பலவாக அனுதினமும் உன்னருளால்
அகிலத்தில் அமைவ திலையோ?
கஷ்டமே நிறைந்திட்ட கர்மவினையாமென்னும்
கடலிலே தள்ளிவிட்டாய்!
கடக்குமொரு தோணியாய்க் காட்சியும் தந்தெனைக்
காப்பதுன் கடமை ஐயா
துஷ்டனாம் சூரனைத் துண்டு துண்டாக்கியே
தேவர்கள் துயர்தீர்த்தவா!
தொல்வினைகள் சூழ்ந்தெனை தொல்லை செய்யாமலே
தடுத்தெனைத் தாங்கி நிற்பாய்!
இஷ்டமாய் உன்னை என் இதயத்தில் என்றுமே
ஏற்றனன் என்னை ஏற்பாய்
இலகுபுகழ் பரங்குன்றில் இருமாதர் இணைந்துறையும்
இன்பமே! சக்தி மகனே

எத்தனை ஜென்மங்கள் எடுத்தேனோ தெரியாது
இப்பூமி தன்னில் ஐயா
இனியேது ஜென்மமும் இவ்வேழைக் கில்லையென
இரங்கிநீ அருள வேண்டும்
முக்திநீ தரவேண்டி முழுவதுமே உன்னை நான்
முக்காலும் நம்பி வாழ்வேன்
முன்பின்னும் தெரியாது! மூவாசை ஒழித்துதான்
முடிவினில் உன்னைச் சேரவே
அத்தனே! அருட்பதம் அண்டினேன்! அடியனை
ஆண்டருள் செய்கு வாயே!
அன்புடன் என்னை நீ அரவணைத் திகபரம்
இரண்டிலும் வாழ வைப்பாய்
பித்தனாம் எளியேனின் பிதற்றலாமிப் பனுவல்
பாடும் உன் பக்தர் எல்லாம்
பாரிலே சீர்பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடவே
போற்றினேன்! சக்தி மகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர். இந்திரவதி பஞ்சலிங்கம் அவர்களின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாண மாவட்டம் மயிலிட்டி கோவில்பற்றில் உள்ள வர்த்தலைவிளான் கிராமம் கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ஆகிய திருத்தலங்களின் அருகே அமைந்துள்ளது. இது இங்கே குடிகொண்டிருக்கும் மருதடி விநாயகப்பெருமானின் பூரண அருள் பெற்றதால் வளம்பெற்றது. தமிழ் முனிவரான மருதடி விக்னேஸ்வர மூர்த்தியின் அனுக்கிரகத்தால் விக்னேஸ்வரராகவே காட்சிதந்த மகா வித்வான் ஸ்ரீ பிரம்மஸ்ரீ சி.கணேசையர் அவர்கள் ஆச்சிரமம் அமைத்து வாழ்வதற்கு இடம் தந்தமையால் இப்பூமி புனிதமுற்றது.

மருதடி விநாயகப்பெருமான் கோயில் கொண்டமையாலும், குளமும் கழனிகளும், பருத்து உயர்ந்து அகன்று நிழல்பரப்பும் மருதமரங்களும் பொருந்தியமையாலும், ஆன்றவிந்து அடங்கிச் சாந்தமே வடிவாகி அங்கு ஆச்சிரமம் அமைத்துத் துறவியாக வாழ்ந்த கணேசையர் அவர்கள் பல்லாண்டு வதிந்தமையாலும் மன அமைதியே வாழ்க்கையின் இலட்சியமென மனத்திற் கொண்டு புன்னகை தவழும் முகங்களுடன் அமைதியாக வாழ்கின்ற பெரும் பேறு பெற்றவர்கள் இவ்வூர் மக்கள் இவர்களுட் பலர் இந் நாட்டிலும் வெளிநாடுகளிலும் மிகப் பெரிய பதவிகளை வகித்தவர்கள், வகிக்கின்றவர்கள். இவர்களுள் திருமதி.இந்திரவதி பஞ்சலிங்கம் அடங்குவார்.

அமரர்.இந்திரவதி பஞ்சலிங்கம் அவர்கள் 1937ம் ஆண்டு ஆடிமாதம் 2ம் நாள் காலஞ்சென்றவர்களான தம்பிஐயா, சீவரட்ணம் தம்பதிகளின் அருளை மகளாக வர்த்தலைவிளான். தெல்லிப்பழையில் பிறந்தார். இவர் மகாசிவம் (திருக்கோணமலை), குகவதி (கனடா), திலகவதி (திருக்கோணலை), சிவநாதன் (லண்டன்), வசந்தாதேவி (லண்டன்), காலஞ்சென்றவர்களான சந்திரவதி, பரமசிவம், சாம்பசிவம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார். இவர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கல்வி பயின்று 1960ம் ஆண்டு காலஞ்சென்றவர்களான செல்லப்பா, லட்சுமிபிள்ளை தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வரான காலஞ்சென்ற பஞ்சலிங்கம் (கணக்காளர் - ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை இலங்கை) அவர்களை தமது 23வது வயதில் திருமணம் செய்தார். இவ்வாழ்வின் சிறப்பால் கிருபாகரன், துளசி என இரு பிள்ளை செல்வங்களை பெற்று அவர்களை அன்புடனும் பண்புடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்தார். 1967ம் ஆண்டில் இவரும் கணவருடன் ஆற்றுப்பளத்தாக்கு அபிவிருத்தி சபையில் தட்டச்சாளர் பதவியில் சேர்ந்து குறுகிய காலத்தில் சுருக்கெழுத்தாளராக பதவியுயர்ந்து அம்பாறை, எம்பிலிப்பிட்டியா, கொழும்பு ஆகிய இடங்களில் வேலை செய்தார். இந்நிறுவனத்தில் பல முகாமையாளர்களின் கீழ் அன்புடனும் பணிவுடனும் தன் கடமையை திறம்பட செய்து 1986ம் ஆண்டில் நன்மதிப்புடன் ஓற்வு பெற்றார்.

1987ம் ஆண்டு தனது மகளின் மகப்பேற்றுக்காக லண்டன் வந்து மருமகனின் பல நண்பர்களுக்கு தன்னாலான உதவிகள் உபகாரங்களைச் செய்தார். மருமகனின் நண்பர்கள் யாராயினும் வீட்டுக்கு வந்தால் அவர்களுக்கு உணவளிக்காமல் வெளியில் செல்ல விடமாட்டார். எல்லோரையும் தன்பிள்ளைகள் போல சமமாக உபசரித்தால் இவர் எல்லோராலும் விரும்பப்பட்டார்.

1988ம் ஆண்டு மகனின் திருமணத்திற்கு இலங்கை சென்ற இவர் 1990ம் ஆண்டு யுத்தத்தால் பல்வேறு இன்னல்களை அனுபவித்து கணவருடன் பல்வேறு இடம் பெயர்வுகளுக்கு முகம் கொடுத்து 1998ம் ஆண்டு மீண்டும் தன் கணவருடன் லண்டன் வந்தடைந்தார். இங்கு வந்து கோயில் தொண்டுகள் மூலம் மீண்டும் புதிய நண்பர்களைப் பெற்றார். பேரப் பிள்ளைகளுடன் இன்புற்று தமிழ், சமயம், தேவாரம், நன்நடத்தை என பலவும் கற்றுக்கொடுத்தார். இத்தகைய நல்வாழ்வில் 2003ம் ஆண்டு தனது அன்புக்கணவரை இழந்து Parkinson எனும் நோயினால் பாதிக்கப்பட்டார். கோயிலை தவிர எங்கேயும் செல்லமனமில்லாமல் வீட்டில் இருந்து தையல், சமையல், தேவாரம் படிப்பது என தன்னால் இயன்றவரை அவரே செய்து வந்தார். வீட்டிற்கு வருவோரை அன்புடன் வரவேற்று இன்முகத்துடன் உபசரித்து உணவளித்து மகிழ்வுற்றார். இவர்காட்டும் அன்பும் பாசமும் எல்லோரையும் கவர்ந்தது.

இவ்வாறு நல்வாழ்வு வாழ்ந்த திருமதி.இந்திரவதி பஞ்சலிங்கம் 04.04.2013 தமது 75வது வயதில் பிள்ளைகள் கிருபாகரன், துளசி மருமக்கள் சாந்தினி, ரட்ணகுமார் பேரப்பிள்ளைகள் ஜானுகா, மயூரன், கௌதம், விதேஷன், வினித்தா, நொயலா சகோதரர்களாகிய மகாசிவம், சிவநாதன் சகோதரிகளாகிய குகவதி, திலகவதி, வசந்தாதேவி, கணவரின் சகோதரிகள் சோதிமணி, சற்குணமணி என்போரும் அவர்தம் குடும்பத்தினரும் உற்றார், உறவினர், நண்பர்கள் கலங்க நந்தன ஆண்டு பங்குனிமாதம் 22ம் நாள் வியாழக்கிழமை நவமி திதியில் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

**அவரது ஆன்மா சாந்தியடைவதாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Farewell to my Friend
## By Vathany Sivaskandarajah

Mrs. Panchalingam is my **friend.**
I used to call her **aunty.**
I met Mr. and Mrs. Panchalingam 35 years ago,
At the River Valley Development Board Office in Colombo
Both were **very gentle** with **kind hearted souls**,
And they treated me as one of their family members.
Not everybody has the **privilege** of meeting such a person,
But **I got to know** her very well.
**We talked** about all kinds of things.
We all became a **family**.
Now I will **miss you.**
The **promise** that I made to come and meet you,
Won't be fulfilled, as I will **never meet you again**,
When I think of you, **a tear** comes to my eyes.
Your friendship was a **blessing**,
And I will miss you **greatly**.
You **lifted my spirits** with your **kind** and **lovely ways**,
And was there with me through **all the ups and downs**.
My **great friend** with whom I had **many good times**,
**Shared many secrets** with, and **loved**,
**I love you** forever and **always**,
And you will **always** be in my **heart**.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dear London Amamma,

After a long 6 hour flight,
You **welcomed** us in with a **smile** so bright.
With your **charming personality** and your **kind heart**,
Our **strong bond** starts,
You made us feel **belonged**
With a bond so **strong**,
Because of our strong **connection**,
We felt your loving **affection**,
Those days with you, were such a **pleasure**,
And gave us **memories** that we **treasure**,
This includes, the **stories** you told us,
Which, we will forever **hold with us**,
We know you are **watching** us from **above**,
And we still feel your **unconditional love**.
You will **forever** be **missed**!

A Little **Quote** that reminded us of **London Amamma**
"Our London Amamma has
Ears to **listen**,
Arms that **hold**,
**Love** that's **never ending**,
And a **heart** that's made of **gold**!"



**With love,**
**Vinu, Venu, Abi**
**(Canada)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

You can shed tears that she is gone
or you can smile because she has lived.
You can close your eyes and pray that she'll come back
or you can open your eyes and see all she's left.
Your heart can be empty because you can't see her
or you can be full of the love you shared.
You can turn your back on tomorrow and live yesterday
or you can be happy for tomorrow because of yesterday.
You can remember her and only that she's gone
or you can cherish her memory and let it live on.
You can cry and close your mind, be empty and turn your back
or you can do what she'd want: smile, open your eyes, love and
go on.

**- By Vitheshan**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வின் உன்னதம்

எவரை, எங்கு, எப்போது காண்போம் என்பது, வாழ்வின் ஓர் உன்னதம். அப்படி, வாழ்வில் ஓர் உன்னத மனித தரிசனமாக கிடைத்தவர் திருமதி. இந்திரவதி பஞ்சலிங்கம் அவர்கள். வேண்டிய ஒரு வேளையில், பல்லாற்றானும் ஒரு பெருந்துணையாய், திடமும் ஆறுதலும் தந்தவர். நட்பில் ஏற்பட்ட பழக்கம், ஓர் அன்னையின் நிலையில் உயர்வுபெற்றது. எனது மகள் சங்கீதா அவரை 'அம்மம்மா' என்றே கண்டார். வெள்ளிக்கிழமை தவறாது வரும்: அப்படியே, வெள்ளிக்கிழமைகளில் அவர் தவறாது நினைவில் வருவார். ஒரு தாயாக சொன்ன அறிவுரையில் நான் அப்படி நினைக்கின்றேன்.

அந்த உன்னத ஆத்மா சாந்தி அடைக!

Dr. ஞானி படிகலிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சுவாமி விவேகானந்தர்

நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி.

அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள்.

கையில் பணமில்லையே... உடலில் வலுவில்லையே...

உதவி செய்ய நண்பர்கள் இல்லையே...

என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே...

எதற்கும் பயப்படாதே... தயங்காதே...!

இலக்கை நோக்கி அடியெடுத்து வை.

தொடர்ந்து முன்னேறு

சோதனைகள் விலகும் பாதை தெளிவாகும்.

நோக்கத்தை அடைந்தே தீருவாய்.

அதை யாராலும் தடுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருத்திராட்சமும் சித்திர்களும்

உருத்திராட்ச மணி மாலைகள் சித்தர் பெருமக்களின் அடையாடங்களில் ஒன்றாகவே இருந்திருக்கிறது. இன்றும் கூட நாம் உருவகப்படுத்தும் சித்தர் உருவங்களில் இந்த உத்திராட்ச மாலைகள் இடம் பெறுவதை கவனித்திருப்பீர்கள். உத்திராட்ச மணிகளைப் பற்றி திருமூலர் மற்றும் அகத்தியர் கூறுவதாவது.

திருமூலர் உத்திராட்ச மணிகளின் மகத்துவம் பற்றி பின்வருமாறு விளக்குகிறார். உருத்திராட்ச மணிகள் எந்த அளவுக்கு மகத்துவமானவை என்பது இந்த பாடல்களின் மூலம் அறியலாம்.

"பூதி யணிவது சாதன மாதியிற
காதணி தாம்பிர குண்டலங் கண்டிகை
ஓதி யவர்க்கும் உருத்திர சாதனந்
தீதில் சிவயோகி சாதனந் தேரிலே"

"காதணி குண்டலம் கண்டிகை நாதமுன்
ஊதுநற் சங்கம் உயர்கட்டி கப்பரை
ஓதுமில் பாதுகம் யோகாந்த ஆதனம்
ஏதுமில் யோகபட் டம்தண்டம் ஈரைந்தே"

அகத்தியரும் தனது பாடல்களில் உருத்திராட்சமணி பற்றிய பல தகவல்களை கூறியிருக்கிறார். அந்த வகையில் இன்று நாம் காண இருப்பது மிகவும் அரியதான ஒரு தகவல். ஆன்மீகத்தில் நாட்டமுள்ளவர் அல்லது துறவறம் மேற்கொண்டவர்கள் உருத்திராட்ச மணி மாலையினை உடலில் அணிந்திருப்பதை அவதானித்திருப்பீர்கள் அந்த மணி மாலைகள் எத்தகையதாக என்ன அளவுடன் இருத்தல் வேண்டும் என்பதை அகத்தியர் தனது சீடருக்கு அருளியிருக்கிறார். அந்த பாடல் பின்வருமாறு...

"துதிக்கவென்றால் புலத்தியனே இன்னாங்கூர்வேன்
துப்புரவாய் செபமாலை பூணுங்காலம்
மதிக்கவே செபமாலை ருத்திரட்ச
மன்னவனே யாறுமுகந் தானெடுப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிக்கவே செபமாலை முப்பதிரெண்டு
பாங்குடனே சடையதிலே யணியவேண்டும்
விதிப்படியே ருத்ராட்ச மன்பத்தொன்று
வேதவிதிப் பிரமாணம் செப்பக்கேளே"

"கேளப்பா புலத்தியனே யின்னாங்கூர்வேன்
கொடியான ருத்திராட்சம் மன்பத்தொன்று
மீளப்பா மாலயது களுத்திலேதான்
மிக்கவே தான்றறிக்க விதியேயாகும்
தாளப்பா கரகணுக்கில் செபமாலை
தகமையுடன னுத்திரட்சம் பன்னிரெண்டாகும்
வேளப்பா ருத்திராட்சம் கங்கணந்தான்
நாதமுறைத் தான்படியே வட்டமாச்சே"

"அட்டமாம் ருத்திராட்ச முழங்கைமேலே
அன்புடனே சரமதுவும் சோடசந்தான்
திட்டமுடன் சோடசமாம் பதினாறப்பா
தீர்க்கமுடன் முழங்கரமா மணித்துள்ளே
நிட்டையிலே தான்பூண்டு மதியங்கொண்டு
நிஷ்களங்க மானசெப மாலைபூண்டு
சட்டமுட னசுவினியா சொன்னநீதி
சடாட்சரனே யுந்தமக்கு சாற்றினேனே"

மனதை ஒருநிலைப்படுத்த செபம் செய்திடும் வேளையில் அணிந்திட வேண்டிய உருத்திராட்சங்கள் பற்றிய தகவலை தான் அசுவினி தேவரிடம் இருந்து அறிந்து கொண்டதாக கூறுகிறார். அதாவது இந்த உருத்திராட்சங்கள் அனைத்துமே ஆறு முகங்கள் உடையதாக இருகக வேண்டுமாம். முப்பதிஇரண்டு மணிகளால் கோர்க்கப் பட்ட உருத்திராட்ச மாலையினை சடையிலும், ஐம்பத்தியொரு மணிகளால் கட்டப் பட்ட மாலையினை கழுத்திலும், பன்னிரெண்டு மணிகளால் கோர்க்கப்பட்ட மாலையினை மணிக்கரத்திலும், பதினாறு மணிகளால் கட்டப்பட்ட மாலையினை முழங்கைக்கு மேற்பட்ட பகுதியிலும் அணிய வேண்டுமென்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரம்மமுனி அருளிய இஞ்சி லேகியம்

அவலேஹம் என்கிற சமஸ்கருதச் சொல்லே மருவி 'லேகியம்' என்றானது. தமிழில் இதனை இளகல் அல்லது இளகம் என்று அழைப்பர். பொதுவில் லேகியம் என்பவை கெட்டியான குழம்பு போல இல்லாமல் சற்றே இறுகிய நீர்ம நிலையில் இருக்கும். இவ்வாறு நீர்ம நிலையில் தயார் செய்யப்படும் லேகிய வகைகளில் ஒன்றான "இஞ்சி லேகியம்" தயாரிக்கும் முறையினை இன்றைய பதிவில் பார்க்க இருக்கிறோம். தோல் நீக்கிய இஞ்சி பத்துப்பலம் நிறத்து எடுத்து, அதனைக் கல்வத்தில் இட்டு எலுமிச்சம் பழச்சாறுவிட்டு நன்கு மைபோல் அரைத்து அதனை ஒரு மண் சட்டியில் சேகரித்துக் கொள்ளவேண்டுமாம். பின்னர் சீரகம், மிளகு, ஏலம், அதிமதுரம், திப்பிலி, கோஷ்ட மூலம், வாலுழுவை, தாளிச்சப்பத்திரி, கடுகு, கொத்தமல்லி, சித்திரமூலம், கற்கடக சிங்கி, குரோசாணி, ஓமம் ஆகியவற்றை வகைக்கு அரைப்பலம் எடுத்துச் சேர்த்து கல்வத்தில் இட்டு கரிசாலை, பூவரசம், பட்டை ஆகியவற்றின் சாறுவிட்டு மெழுகு பதத்தில் அரைத்து எடுத்து இஞ்சி சேகரித்த மண் சட்டியில் இதனையும் சேர்த்துக்கலந்து கொள்ள வேண்டுமாம்.

மோரில் உப்புப்போட்டு கலந்து அதில் பிரண்டையை சிறுதுண்டுகளாக அரிந்து ஊறப்போட்டு நன்கு காயவைத்து எடுத்து "சூரணமாக செய்து கொள்ள வேண்டுமாம். இந்த சூரணத்தில் ஒருபலம் எடுத்து முன்னர் மருந்துக்கலவை சேகரித்த மண்சட்டியில் இட்டு அதனுடன் சம அளவில் வங்காள சர்க்கரை சேர்த்துக்கொள்ள வேண்டுமாம். அத்துடன் அளவாக நெய் சேர்த்து லேகியமாக தயார் செய்து எடுத்து சேமித்துக்கொள்ள வேண்டுமாம்.

இந்த லேகியத்தில் கொட்டைப்பாக்களவு எடுத்து காலை மாலை என இரு வேளையும் ஏழு நாட்கள் தொடர்ந்து உண்டுவர பித்த வாய்வு சம்பந்தமான கோளாறுகள் நீங்கி குணமாகும். அத்துடன் பித்த வாய்வு, உஷ்ண காந்தி, புரட்டல், வாந்தி, வலிகுன்மம், சீரணவாதம் (செரியாமை), உப்பிசம், ருசியின்மை ஆகியவை குணமாகும் என்கிறார்.

மருந்துண்ணும் ஏழு நாளும் பத்தியமாக பசிக்கும் போது பசியின் தன்மை அறிந்து உண்ண வேண்டும் என்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவம் தீர்க்கும் உருத்திராட்ச மணிமாலை செபம்.

மனிதராய் பிறந்த அனைவருமே ஏதோ ஒரு வகையில் தாங்கள் வாழ் நாளின் கணிசமான நேரத்தினையும், பாடுபட்டு சேர்த்த தங்களுடைய செல்வத்தினையும் கொண்டு செய்த பாவங்களை தீர்க்கவும், புண்ணியங்களை சேர்க்கவுமே செலவிடுகிறோம். அநேகமாய் இதற்கு யாரும் விதிவிலக்காய் இருந்திட முடியாது.

பாவங்கள் சேர்வதும், புண்ணியங்கள் சேர்வதும் நமது எண்ணம், செயல், சிந்தனைகளை ஒட்டியே அமைகிறது. இதை உணர்ந்தவர்கள் பாவங்களை தவிர்த்து புண்ணியங்களை சேகரிக்கின்றனர். இப்படி அறிந்தோ, அறியாமலோ செய்த பாவங்களை தீர்க்கும் முறையொன்றினை அகத்தியர் அருளியிருக்கிறார். இந்த முறையை இங்கே பகிரக் காரணம் உருத்திராட்சத்தின் மகிமையாக கூறவரும் இடத்தில் அகத்தியர் இந்த செபமுறையினை விவரித்திருப்பதால் தான்...

வாருங்கள் அகத்தியர் மொழியில் இந்த முறையினைப் பற்றி பார்ப்போம்...

நன்கு நீராடிய பின்னர், உயர்ந்த திருநீற்றினை ா சிவ சிவ என்னும் சிவ மந்திரத்தைக் கூறியபடியே உடலில் பூசிக்கொள்ள வேண்டுமாம். பின்னர் உருத்திராட்ச மாலையினை கையில் எடுத்துக்கொண்டு வடகிழக்கு முகமாய் அமர்ந்து கொள்ள வேண்டும் என்கிறார். இந்த நிலையில் வானத்தைப் பார்த்தவாறே "நயமவசி" என்னும் மந்திரத்தை உருத்திராட்சமணி மாலையினை உருட்டியவாறே ஒரு லட்சம் தடவை செபிக்க வேண்டும் என்கிறார். இப்படி செய்தவன் மூலம் சூரியனைக் கண்ட பனிபோல் பாவமெல்லாம் விலகிவிடும் என்கிறார் அகத்தியர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீண்ட ஆயுளைத்தரும் வல்லாரை கற்பம்

நீடித்த இளமையோடும், நோயற்ற உடல் நலத்துடன் வாழ சித்தர்கள் பல கற்பவகைகளை அருளியிருக்கின்றனர். பொதுவில் இவை மருத்துவ காயகற்பம், யோக காயகற்பம் என இரு பிரிவாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது.

வல்லாரைச்சமூலம் எடுத்து, அதனை நன்றாகக் கழுவி அதனை விரித்து நிழலில் காயவைத்துக்கொள்ள வேண்டுமாம். பின்னர் அதனை சூரணமாக செய்து சேமித்துக்கொள்ளவும். தினமும் இந்த சூரணத்தில் வெருகடி அளவு எடுத்து உண்ண வேண்டுமாம். இவ்வாறு தொடர்ச்சியாக ஒரு வருடம் உண்ண வேண்டும் என்கிறார்.

இவ்வாறு ஒரு வருடம் தொடர்ந்து உண்டால் நரை திரை நீங்குவதுடன் சிறந்த உடல் பலத்துடன் பதினாறு வயது குமரன் போல் நூறு வயது வரை வாழலாம் என்கிறார். இந்த காயகற்பம் போல் நூறு வயது வரை வாழலாம் என்கிறார். இந்த காயகற்பம் உண்டவர்கள் சித்தர்களைப் போன்று தமிழில் நல்ல தேர்ச்சியும் பெறலாம் என்கிறார். இந்த கற்ப முறைக்கு பத்தியம் எதுவும் சொல்லப்படவில்லை.

**குறிப்பு :** சமூலம் என்பது செடியின் வேர், தண்டு, இலை, பூ, காய், விதை என அனைத்தும் அடங்கியது.

**வெருகடி :** வெருகு என்பது காட்டுப்பூனையை குறிக்கும். வெருகடி என்பது பூனை தன் காலில் உள்ள பெருவிரல் உள்ளிட்ட மூன்று விரல்களினால் எடுக்கும் மண்ணின் அளவு. பழந்தமிழர் அளவை குறியீடுகளில் வெருகடியும் ஒன்று.

**சூரணம் :** ஈரமானவைகளை காய வைத்தும், காயந்தவைகளை சுத்தமாக்கியும், வறுக்க வேண்டியவைகளை வறுத்தும் இடித்தோ அரைத்தோ பொடியாக்கி சலித்து எடுத்துக்கொள்வது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சபூதமும், சித்த மருத்துவமும் – ஓர் அறிமுகம்.

நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்கிற ஐந்து அம்சங்களையே பஞ்ச பூதம் என்கிறோம். இந்த பஞ்சபூதங்களின் கலவையே இந்த பூமியும் அதில் வசிக்கும் அனைத்து உயிர்களும். இந்த பஞ்சபூத கலவையானது ஒவ்வொரு பொருளிலும், உயிரிலும் தனித்துவமான விகிதத்தில் கலந்திருக்கிறது. இதனையே சித்தர் பெருமக்கள் "அண்டத்தில் உள்ளதே பிண்டம், பிண்டத்தில் உள்ளதே அண்டம்" என கூறியிருக்கின்றனர்.

மனித உடலில் விரவி பரந்திருக்கும் இந்த பஞ்ச பூத அம்சங்களின் சமநிலையில் மாற்றங்கள் அல்லது குறைபாடுகள் உருவாகும் போதுதான் ஒருவருக்கு மூப்பு, பிணி போன்றவை உண்டாகிறது. சித்தர்களின் மருத்துவம் என்பது இந்த பஞ்சபூத அம்சங்களை கையாளுவதில் துவங்கி அவற்றின் சமநிலை பேணுவதையே அடிப்படை நோக்கமாக கொண்டிருக்கிறது.

பஞ்சபூத அம்சங்களையும் அதன் கூறுகளையும் அறிந்திருந்த சித்தர் பெருமக்கள் மனித உடல் மட்டுமில்லாது எந்த ஒரு பொருளின் தன்மையையும் தேவைக்கு ஏற்ப மாற்றிவிடும் வல்லமை பெற்றிருந்தனர். இன்றைய நவீன அறிவியல் முன் வைக்கும் மூலக்கூறு அறிவியலின் ஆதி வடிவமே நமது சித்த மருத்துவமும், இரசவாதமும் என்றால் மிகையில்லை.

நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்கிற இந்த ஐந்து அம்சங்களை முன்னிலைப்படுத்தும் மூலகங்களை அகத்தியர் தனது "அகத்தியர் பரிபூரணம்" என்னும் நூலில் பகுத்துக்கூறியிருக்கிறார். அந்த தகவல் பின் வருமாறு...

நிலம் அல்லது மண்ணை முன்னிலைப்படுத்தும் காரவகைகள் பதின்மூன்று இருக்கின்றதாம்.

நீரை முன்னிலைப் படுத்தும் சார வகைகள் பன்னிரண்டு இருக்கிறதாம்.

நெருப்பினை முன்னிலைப்படுத்தும் வைப்பு வகைகள் முப்பத்தி இரண்டு இருக்கிறதாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காற்றை முன்னிலைப்படுத்தும் விளைவு வகைகள் முப்பத்தி இரண்டு இருக்கிறதாம். ஆகாயத்தை முன்னிலைப்படுத்து உபரச வகைகள் நூறு இருக்கிறதாம்.

இதுதான் அடிப்படை மூலகங்கள், மருந்து தயாரிப்பு அல்லது இரசவாதத்தில் தேர்ச்சி பெற நினைப்பவர்கள் முதலில் இந்த வகைகளைப்பற்றி அறிந்து தெளிவது அவசியம். அதன் அடுத்த கட்டமாய் இவை ஒவ்வொன்றையும் மற்றவைகளுடன் சேர்க்கும் போது உண்டாகும் விளைவுகளை அறிவதாக இருக்கும்.

## நந்தீசர் அருளிய நெல்லிக்காய் கற்பம்.

இத்தகவல் "நந்தீசர் சர்வகலை ஞானம்" என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. முற்றிய நெல்லிக்காயாக பார்த்து எடுத்து அதனைப் பசுப்பாலில் அவித்து பின்னர் நிழலில் உலர்த்திக்கொள்ள வேண்டுமாம். நன்கு உலர்ந்ததும் அதனைச் சூரணமாக செய்து கொள்ள வேண்டுமாம். பின்னர் அந்தச் சூரணத்துடன் சம அளவாக சுத்தி செய்த கந்தகம் சேர்த்து தேனில் குழைத்து வெருகடி அளவு உண்ண வேண்டுமாம்.

இவ்வாறு தொடர்ந்து ஒரு மண்டலம் உண்டு வந்தால் உடலானது சிவசக்தி தேகமாவதுடன் காயசித்தியும் உண்டாகும் என்கிறார்.

**ஒரு மண்டலம் :** 48 நாட்கள்

## கருநெல்லி கற்பம்

ஐந்து கருநெல்லிப்பழங்களில் இருந்து சாறு எடுத்து, அதன் எடைக்கு சம அளவில் சுத்தமான தேன் கலந்து. உண்ண வேண்டுமாம். இப்படி தினமும் இரு தடவை அந்தி சந்தி வேளைகளில் உண்ண வேண்டுமாம். அதாவது ஒரு நாளைக்கு காலையில் ஐந்து பழம், மாலையில் ஐந்து பழமென இரண்டு தடவை சாறெடுத்து தேன் கலந்து சாப்பிட கூறுகிறார்.

இப்படி ஒருமண்டலம் அதாவது நாற்பத்து எட்டுநாட்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டுமாம். ஒரு நாளைக்கு பத்துக்கருநெல்லி பழங்கள் வீதம், நாற்பத்தி எட்டு நாட்களுக்கும் நானூற்றி எண்பது பழங்கள் தேவைப்படும். எனவே இந்த பழங்கள் கிடைக்கும் காலத்தில் இந்த கற்பத்தினை முயற்சிக்கவேண்டும்.

இவ்வாறு ஒரு மண்டல காலம் தொடர்ந்து உண்டால், சுவாசம் சீரடைந்து தேக சித்தியும் கிட்டுமாம். தேக சித்தி கிடைத்த பின் உடலுக்கு எந்த தீங்கும் உண்டாகாது என்றும் சொல்கிறார் இந்த கற்பத்திற்கு பத்தியங்கள் எதுவும் சொல்லப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**How to dissolve kidney stones?**

Cardomom Seed - 25g
Coconut flower - 25g
Thistle root - 25g
Crateva magna root - 25g
Siru poonai root - 25g

Take all the above mentioned ingredients into a new pot and boil it to 10:1 percent i.e., add one litre of water and boil it to 100ml. Drink it in the morning and evening for 6 days to make to the stone in the kidney dissolve and it will be excreted through urine.

**Medicine for cold**

Add up 35g of black cumin, 70g of kazharchi dhal, 35g of turmeric and grind it and divide them into 6 equal shares. Eat it in the mornings and evenings for thr e days and it relieves colds.

**Depression**

Depression can cause many effects to the human body, such as lack of sleep, head ache, tiredness, blood pressure, heart attack, diabetes and many more. If we sit in a lonely place and keep on chanting, 'Om Hreem' then the disturbances in the mind would be relieved and the mind would become fresh. All the sorrows caused by the enemies will disappear, the stress and confusion in the mind will go away and you also can become like any other common man.

**Headache**

To get relieved from stress, individual's discipline and yoga will be useful. For headaches, grind ginger and add lemon juice to it. Apply this to your forehead to relieve headaches.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

நிகழும் நந்தன வருஷம் பங்குனிமாதம் 22ம் நாள் (04.04.2013) வியாழக்கிழமை இறைவனடி எய்திய எமது தாயார், மாமியார், சகோதரி, பேத்தியர் திருமதி. இந்திரவதி பஞ்சலிங்கம் அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், பலவகை விதத்திலும் அனுதாபச்செய்திகளை அனுப்பியவர்களுக்கும், மற்றும் பல்வேறு வகைகளில் எமக்கு ஆதரவும், உதவியும் ஈந்து எமது துக்கதிற் கலந்துகொண்டோர்க்கும் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியையிற் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்த அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் அன்புள்ள

| பிள்ளைகள் | மருமக்கள் | சகோதரர்கள் |
|---|---|---|
| கிருபாகரன் | சாந்தினி | மகாசிவம் |
| துளசி | ரட்ணகுமார் | குகவதி |
| | | திகைவதி |
| | | சிவநாதன் |
| | | வசந்தாதேவி |

**பேரப்பிள்ளைகள்**

ஜானுகா, மயூரன், கௌதம்

விதேஷன், வினித்தா, கொயலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Thank you

On the 04th of April, a loved mother, sister, and grandma, and most of all a friend, Mrs Inthiravathy Panchalingham, passed away to be in a place without pain and suffering, the presence of God. Many people had their own memories of her and kindly showed their sympathy by attending the funeral and through cards, flowers and poems.

Mrs. Inthiravathy's family would like to thank everyone who helped the funeral and the 31st day ceremony take place smoothly and successfully. We highly appreciate the support and kindness that everyone has shown to us through this hard time, and we would like to take this opportunity to give you our heartfelt thanks.

May good thoughts and memories of Mrs. Panchalingham stay with us for as long as we live.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவ

தம்பிஐயா + சீவரட்ணம்
(வர்த்தலைவிளான் - தெல்லிப்பளை)

- சந்திரவதி + கிருஷ்ணர்
  - குமுதினி + ஜெயராஜா (நிரோஷ் ஜெனிஷ் கீர்த்திகா)
    - கிருஷ்ணவேணி + சிவயோகன் (அஞ்சலி சுவாதி)
      - அனுசியா + சாந்தராஜா (சங்கவி ஆரணி)
- **இந்திரவதி**
  - **கிருபாகரன்** + சாந்தினி
    - விதேஷன்
    - வினித்தா
    - நொயலா
  - **துளசி** + ரட்ணகுமார்
    - ஜானுகா + மயூ
      - கௌதம்
- பரமசிவம் + கங்காதேவி
  - அருள்நம்பி + உதயகுமாரி (மிதுசா மிதுசன்)
    - அருள்பரன் + புஸ்பகலா (அக்சவி அகீசன் அகிலாஸ்)
      - அருள்வாணி + ஆனந்தராஜ் (சாருஜன் பிரநிதா)
        - அருளீசன் + தமிழ்ச்செல்வி (கௌசிகா)
- சாம்பசிவம் + சுகிர்ணலீலா
  - சர்பா + உமாசுதன் (ரதுசா லக்ஷ்மன்)
    - கவிதா + தயாளன் (காவியா காவியன்)
      - சுகிர்தா
        - பிரேம்நாத்
- மகாசிவம் + சொர்ணாம்பிகை
  - நர்மதா
  - சஞ்சே
  - பவித்ரா
  - நிவேதிகா
- குகவதி + மாணிக்கவா
  - சசிகரா + கலாதரன் (வினுஷா வேணுஷ அபிஷா)
    - காங்கேசவ + சுஜிதா (கவித்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்சாவழி

செல்லப்பா + லக்சுமிபிள்ளை
(உரும்பிராய்)

குகவதி
+
...ாணிக்கவாசகர்

சசிகரா
+
கலாதரன்
(வினுஷா
வேணுஷா
அபிஷா)

காங்கேசன்
+
சுளிதா
(கவித்)

திலகவதி
+
பாலசுப்பிரமணியம்

காவேரி
+
பிரதீப்குமார்
(திஷானுகா)

கஜனி
+
யசோதரன்
(ருக்சன்)

**பஞ்சலிங்கம்**

மனோன்மணி + செல்வஞானப்பிள்ளை — கங்காதேவி, கோகளிநாதன், வள்ளியம்மை, உத்தமி, சிவசக்தி

சோதிமணி + சச்சிதானந்தன் — செல்வராஜா, செல்வமணி, செல்வராணி, செல்வகுமார்

சற்குணமணி + இராசலிங்கம் — ஜெகதீஸ்வரி, ராஜமோகன், ஜெயந்தி

தனபாலசிங்கம் + புஸ்பாவதி — செந்தூரன், மயுரன், லதுரன்

குணமணி + பத்மநாதன் — நரேஸ், நந்தன்

**துளசி**
+
...ட்ணகுமார்

...கா + மயூரன்

கௌதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Thambiaiya + Seevaratnum
(Varthalaivilan, Tellippalai)

Chandravathy
+
Krishnar

Kumuthini +
Jeyaraja
(Nirosh, Jen-
ish, Keerthika)
-
Krishnaveni +
Sivayogan
(Anjali,
Swathy)
-
Anushya + San-
tharaja
(Sangavi,
Arani)

**Inthiravathy**

Paramasavam
+
Kangadevi

Arulnambi +
Uthayakumari
(Mithusha,
Mithushan)
-
Arulparan +
Pushpakala
(Akshavi,
Akeeshan,
Akilash)
-
Arualvani +
Anantharajah
(Sarujan
Paranitha, )
-
Aruleasan +
Thamilchelvi
(Kowshika)

Sambasivam
+
Sugarnaleela

Sarba +
Umasuthan
(Rathushaa,
Lakshman)
-
Kavitha +
Thayalan
(Kaviya,
Kaviyan)
-
Sugirtha
-
Premnath

Mahasivam
+
Sornambihai

Narmatha
-
Sanjay
-
Pavithira
-
Nivethika

Guha
Manick

Sasi
Kala
(Vi
Ver
Ab

Kang
Su
(Ka

**Panchalingam**

Mano
-
Selvaga

Kang

Kokal

Valli

Utl

Siva

**Kirupaharan**
+
Shanthini

Vitheshan
Vinitha
Noella

**Thulacy**
+
Ratnakumar

Januga +
Majuran
-
Gowtham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cehllapah + Luxmipillai
(Urumparai)

Guhavathy
+
Manickavasagar

Sasikara + Kalatharan (Vinusha, Venusha, Abisha)
-
Kangeshan + Sulitha (Kavith)

Thilagavathy
+
Balasubramaniyam

Kavery + Piratheepkumar (Thishanuka)
-
Kajani + Yasotharan (Rukshan)

Manonmani
+
Selvaganampilai

Kangadevi
-
Kokalinathan
-
Vallinayaki
-
Uthami
-
Sivasakthi

Sothimani
+
Sachithanantham

Selvaraja
-
Selvamani
-
Selvarani
-
Selvakumar

Satkunamani
+
Rasalingam

Jegatheeswary
-
Rajamohan
-
Jeyanthi

Thanapalasin-gam
+
Puspawathi


Senthuran
-
Majuran
-
Lathuran

Kunamani
+
Pathmanathan

Naresh
-
Nanthan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள்,
அது வேறொருவருடையதாகும்.
இந்த மாற்றம் உலக நியதியாகும்.

இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்
-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by : SS Digital's - 0715415854